சுருக்கம்

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறை – ஈரோடு மாவட்டம் – ஈரோடு ஊராட்சி ஒன்றியம் – மாணிக்கம்பாளையம் கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி கட்டடத்தை இடிக்க அனுமதி அளித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–4) துறை

அரசாணை(ப) எண்.463 நாள்: 17.9.2010

படிக்கப்பட்டவை.

1. ஈரோடு மாவட்டம் ஆட்சியரின் கடித எண்.10/2010/அ11, நாள் 18.6.2010.
2. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரின் கடித எண்.51451/2010/டியு3, நாள் 5.08.2010.

-----

ஆணை:

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில், ஈரோடு மாவட்டம், ஈரோடு ஊராட்சி ஒன்றியம், மாணிக்கம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் வடக்கு பார்த்த 760 சதுர அடி உடைய ஆர்.சி.சி.கட்டடத்தின் தளமட்டம், தரைமட்டத்தைவிட தாழ்வு நிலையில் உள்ளது என்பதால் குறைவான மழை பெய்தால் கூட கட்டடத்தின் உட்பகுதியில் தண்ணீர் தளப்பரப்பு முழுவதுமாக பரவி விடுகிறது என்றும், அவ்வாறு நீர்தேங்குவதால் கொசு மற்றும் இதர நுண்ணுயிரிகள் தோன்றி சுகாதார சீர்கேட்டை உருவாக்கும் நிலை உள்ளது எனத் தெரிவித்து எவ்வித பயன்பாடு இன்றி உள்ள இக்கட்டடத்தினை இடித்துவிட அனுமதி கோரியுள்ளார்.

2. அரசாணை (நிலை) எண்.56, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி (மா.அதி–4) துறை, நாள் 3.4.2008–ல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்களின் பொறுப்பில் உள்ள கட்டடங்களில் பழைய கட்டடங்களை இடிப்பதற்கு வழிகாட்டி நெறிமுறைகள் வெளியிடப்பட்டு அதில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

1) செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அவர்கள் சமர்ப்பித்த கட்டட கட்டமைப்பின் உறுதி குறித்த அறிக்கையின் அடிப்படையில் அதாவது (i) கட்டடத்தின் வயது 40 ஆண்டுகளுக்கு மிகையாக இருந்தால் கட்டடத்தின் பரப்பினை ஏதும் கருத்தில் கொள்ளாமலும் (ii) கட்டடத்தின் பரப்பளவு 450 சதுர அடிக்குக், குறைவாகவும் இருக்கும் பட்சத்தில் அத்தகைய கட்டடத்தை இடிப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரே உரிய ஆணை பிறப்பிக்கலாம்.

2) ஆனால் கட்டடத்தின் வயது 30 லிருந்து 40 ஆண்டுகளுக்குள் இருந்து கட்டடத்தின் பரப்பு 450 சதுர அடிக்கும் அதிகமாக இருக்கும் பட்சத்தில் செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) அவர்கள் அளித்த கட்டடத்தின் உறுதித்தன்மை குறித்த அறிக்கையுடன் செயற்குறிப்பினை மாவட்ட ஆட்சித் தலைவர் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநருக்கு அனுப்ப வேண்டும்.

3. இக்கட்டடத்தின் உறுதித்தன்மை குறித்து செயற்பொறியாளரது அறிக்கையில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

- மேற்படி கட்டடம் ஜவஹர் வேலை வாய்ப்புத்திட்டம் 1992-1993–ம் நிதியாண்டில் கட்டப்பட்ட ஆர்.சி.சி.கூரைக்கட்டடம் ஆகும். கட்டடத்தின் வயது 18 ஆண்டுகள் ஆகும்.

- கட்டடத்தின் பரப்பளவு 760 சதுர அடியாகும்

- அருகிலுள்ள பிரதான தார்ச் சாலையை விட கட்டடத்தின் தரைத்தளம் மிகவும் தாழ்வாக உள்ளது.

- மழைநீர் உள்ளே தேங்கி நிற்பதால் கட்டடத்தின் சுவர் மற்றும் தரை ஆகியவை சேதமடைந்துள்ளன. எனவே, கட்டடம் பயன்படுத்த இயலாத நிலையிலுள்ளது.

- கட்டடத்தின் கூரை நன்றாக உள்ளது. இருப்பினும் Sunshade மிகவும் பழுதடைந்து பாதிக்கப்பட்டுள்ளது.

4. ஈரோடு ஊராட்சி ஒன்றியம், மாணிக்கம்பாளையம் கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி கட்டடத்தின் வயது 18 ஆண்டுகள்தான் ஆகிறது. ஆனால் மழைநீர் தேங்கி நிற்பதால் கட்டடத்தின் சுவர் மற்றும் தரை ஆகியவை சேதமடைந்து கட்டடம் பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளது என்பதால் ஈரோடு ஊராட்சி ஒன்றியம் தனது தீர்மான எண்.1705, நாள் 26.5.2010–ல் மேற்படி கட்டடத்தை இடிக்க இசைவளித்துள்ளது. மேலும், பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் தொகுதி வளர்ச்சி நிதித் திட்டத்தின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் புதிய கட்டடம் கட்ட பரிந்துரை செய்யப்பட்டுள்ளதாலும், பள்ளி வளாகத்தில் போதிய இடவசதி இல்லாததாலும், வடக்கு பார்த்த 760 சதுர அடி உடைய ஆர்.சி.சி.கூரை கட்டடத்தின் மேல், முதல் தளம் அமைக்க சாத்தியக்கூறு இல்லாததாலும், கட்டடத்தின் வயது 18 வருடங்களே இருப்பினும், உபயோகப்படுத்த இயலாத கட்டடத்தை, அவசியத்தினை கருத்தில் கொண்டு சிறப்பினமாகக் கருதி இடித்து அப்புறப்படுத்த கோரியுள்ள, ஒன்றில் படிக்கப்பட்ட ஈரோடு மாவட்ட ஆட்சியரின் கருத்துருவினை இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர் அரசுக்கு பரிந்துரை செய்துள்ளார்.

5. ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநரது கருத்துருவானது அரசினால் நன்கு ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வுக்குபின், ஈரோடு மாவட்டம், ஈரோடு ஊராட்சி ஒன்றியம், மாணிக்கப்பாளையத்தில் அமைந்துள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் வடக்குபார்த்த

760 சதுர அடி பரப்பளவு உடைய, கட்டப்பட்டு 18 ஆண்டுகளே ஆன பள்ளிக் கட்டடத்தின் உறுதித்தன்மையற்ற நிலையினைக் கருத்தில் கொண்டு இக்கட்டடத்தை இடிப்பதற்கு, இதனை ஒரு சிறப்பினமாகக் கருதி அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இது குறித்து உடனடியாக மேல் நடவடிக்கை எடுக்குமாறு ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவுறுத்தப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

கா.அலாவுதீன்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி இயக்குநர், சென்னை – 15.
மாவட்ட ஆட்சியர், ஈரோடு மாவட்டம்.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:-
முதுநிலை நேர்முக உதவியாளர்,
மாண்புமிகு துணை முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இருப்பு கோப்பு /உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர்.